[19th August 1960

All-India Adivasis' Conference

*311 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இவ்வாண்டு மே மாதம் உதகையில் நடந்த அகில இந்திய ஆதிவாசிகளின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சர்க்காருக்கு கிடைத்தனவா?

(ஆ) அப்படியானால் அவைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

(இ) மாநாட்டிற்காக சர்க்கார் செலவிட்ட தொகை எவ்வளவு?

THE HON. SRI P. KAKKAN : (அ) Not yet received.

(ஆ) Does not arise.

(இ) The Government have permitted an expenditure up to a ceiling of Rs. 5,125 (rupees five thousand one hundred and twenty-five only).

9-00 a.m. SRI S. M. ANNAMALAI : சர்க்கார் ஆதிவாசி மாநாட்டை நடத்தியதுபற்றி இவ்வாறு மலையில் வாழும் ஏறத்தாழ 25,000 ஆதிவாசி மக்களுக்கு ஒன்றும் தெரியாது. ஏன் அரசாங்கம் அவர்களுக்கும் அழைப்பு விடுத்திருக்கக் கூடாது?

THE HON. SRI P. KAKKAN : ஆதிவாசி மாநாட்டை சர்க்கார் நடத்தவில்லை. பாரதிய ஆதிவாசிகள் சங்கம்தான் அந்த மாநாட்டை நடத்தியது என்று கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI S. M. ANNAMALAI : அப்படி நடத்தப்பட்ட மாநாட்டுக்கு சர்க்கார் ஏன் ஐயாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு செலவழிக்க வேண்டும்? அதற்கு என்ன காரணம்?

THE HON. SRI P. KAKKAN : ஆதிவாசிகளுக்கு அரசாங்கம் எத்தனையோ நன்மைகள் செய்கின்றது. அதன்படி, அவர்கள் நன்மைக்காக மாநாடு நடத்தினால் அதற்கும் அரசாங்கம் உதவி செய்ய முன்வருகிறது.

Gypsies

*312 Q.—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்திலே எத்தனை நரிக்குறவர்கள் இருக்கிறார்கள்?

(ஆ) இவர்களுள் எத்தனை பேர்களுக்கு அரசாங்கம் வசதி செய்து கொடுத்துள்ளது?

THE HON. SRI P. KAKKAN : (அ) & (ஆ) The information is being collected and will be placed on the table of the House as soon as possible.

19th August 1960]

Sri P. G. MANICKAM: நரிக் குறவர்களுக்கு சர்க்காரால் என்ன என்ன விதமான வசதிகள் தற்போது அளிக்கப்பட்டு வருகின்றன?

The Hon. Sri P. KAKKAN: நிலங்கள் வாங்கிக் கொடுக்கப் படுகின்றன; வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன; இன்னும் குழந்தைகளின் கல்விக்கு வசதி செய்யப்படுகிறது; அதைத் தவிர அவர்கள் கைத்தொழிலில் ஈடுபட்டால் அதையும் கவனிகக அரசாங்கம் முன்வரும்.

Srimathi A. S. PONNAMMAL: தலைவர் அவர்களே, அனேக இடங்களில் நரிக் குறவர்களுக்காக வீடு கட்டிக் கொடுத்தும் கூட, அவர்கள் அங்கு வசிக்காமலிருக்கிறார்கள். அதுபற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும்?

The Hon. Sri P. KAKKAN: சில இடங்களில் நன்றாக வசிக்கிறார்கள்; மக்களோடு மக்களாகப் பழகி வேலை செய்கிறார்கள். சில இடங்களில் வசிக்காமல் போகிறார்கள் என்றால், என்ன காரணம் என்று அவர்களுக்குத்தான் தெரியும். எனக்குத் தெரியவில்லை.

Sri A. GOVINDASAMY: நெய்வேலிப் பகுதியில் நரிக் குறவர்களுக்கு வீடு கட்டித் தரப்பட்டிருக்கிறது. ஆனால், விவசாயத்திற்குப் போதுமான நிலம் கொடுக்காததால், அந்த இடத்தில் வசிக்காமல் அந்த இடங்களைக் காலி செய்துவிட்டுப் போய்விட்டார்கள். ஆகவே, அவர்கள் விவசாயம் செய்யவும் அரசாங்கம் புறம்போக்கு நிலத்தை ஒதுக்கித்தர முயற்சிப் பார்களா?

The Hon. Sri P. KAKKAN: நெய்வேலிப் பகுதியில் நரிக் குறவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கிணறுகள் வெட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நிலமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்குப் போதுமான நிலம் கொடுக்கப்படவில்லை என்று கனம் அங்கத்தினர் நினைக்கிறார்களா என்று தெரியவில்லை.

Sri K. VINAYAKAM: நரிக் குறவர்கள் தினந்தோறும் குளிப்பதில்லை; குளிக்க வேண்டுமென்பதை நம்புவதுமில்லை. அவர்கள் தினந்தோறும் குளிக்கும் வகையில், நன்னீர் வசதி இருக்கும் இடத்தில் அவர்களைக குடியிருக்கச் செய்ய முடியுமா? மழை பெய்தாலும்கூட, மழையில் நனையக் கூடாது என்று ஒரு புறமாக ஒதுங்கிக் கொள்கிறார்கள். ஆகவே, அவர்கள் அடிப் படையிலே செய்ய வேண்டிய நல்ல காரியங்களைச் செய்வதற்கு வசதி செய்யாமல், அவர்களுக்கு வீடு, மற்றவை கட்டிக்கொடுப் பதினால் அவ்வளவாகப் பயன் இல்லை. முக்கியமாக, அவர்கள் குளித்து ஆரோக்கியமாக இருக்கக்கூடிய வழிகளைக் கடைப் பிடிக்கச் செய்ய அரசாங்கம் முன்வருமா?

The Hon. Sri P. KAKKAN: முதலில் வீடு கட்டிக் கொடுத்து, அங்கு வசிக்கும்படி செய்தால்தானே குளிக்க வசதி செய்து கொடுக்கமுடியும்? கூடுமானவரை அந்த நண்பர்கள் நன்றாகக்

[19th August 1960

குளிப்பதற்கும், உடுத்துவதற்கும் முன்வந்துகொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அவர்களில் சில பேர்களைப் பார்த்தால், அவர்கள் எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லமுடியாமல் ஆச்சரியப்படும் வகையில் இருக்கிறார்கள்.

Sri S. RANGANATHA MUDALIYAR : Do the Government know that so far as these Narikoravars are concerned their nomadic spirit is so great that they refuse to be settled and therefore some coercive measures have to be adopted by the Government to settle them at one place to prevent wastage of manpower?

The Hon. Sri P. KAKKAN : That is why we have asked them to settle in one place and take advantage of the facilities offered by the Government.

State Labour Advisory Board

*** 313 *Q*.—Sri S. M. ANNAMALAI :** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 12, 13—2—1960 தேதிகளில் நடந்த மாநில தொழிலாளர் ஆலோசனை போர்டின் (State Labour Advisory Board) கூட்டத்தில் என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டன?

(ஆ) அவைகளில் அமுலாக்கப்பட்டவை எவை?

The Hon. Sri R. VENKATARAMAN : A statement[a] furnishing the information is placed on the table of the House.

Bridge across Bhavani river

*** 314 *Q*.—Sri P. G. MANICKAM :** கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்ற கோயம்புத்தூர் ஜில்லா கோபிச்செட்டிப்பாளையம் தாலூகா பெருந்தலையூர் கிராமத்தில் பவானி ஆற்றின்மீது பாலம் கட்டும் வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

(ஆ) இப்பாலம் கட்டுவதற்காக கணக்கிடப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : (அ) & (ஆ) The detailed estimate and plans are under final scrutiny. The final cost of the work will be worked out and the work taken up for execution after technical sanction is accorded.

North Arcot District Co-operative Central Bank

*** 315 *Q*.—Sri S. M. ANNAMALAI :** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு மத்திய பாங்கில் இதுவரை பணம் தள்ளுபடி (write off) செய்யப்பட்டுள்ளதா?

---

[a] Printed as Appendix III on pages 108-109, infra.